DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI.

# OS . No. 31/ 2019

Deposition of Witness : DW1

| | |
|---|---|
| Name - பெருமாள்ராஜா | Father's Name - திருமுழுசெட்டியார் |
| Village\City - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.04.2023.

(சாட்சி அழைக்கபட்டு சத்தியபிரமாணம் செய்யபட்டார்)
சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்

**3 வது பி.வா.கு.வி.:**

கேள்வி : திருமுழுசெட்டியார் அதாவது உங்கள் அப்பாவிற்கு 2 மனைவிகள் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : முதல் மனைவியை 1942 ல் திருமணம் செய்தார் என்றால்?

பதில் : தெரியாது.

கேள்வி : 5 வருடமாக அவர்கள் இருவருக்கும் குழந்தை இல்லை என்பதால் அவருடைய மனைவியின் தங்கையை 2 வது மனைவியாக திருமணம் செய்து கொண்டார் என்றால்?

பதில் : சரிதான். ஆனால் எத்தனை வருடங்களாக குழந்தை இல்லை என்று எனக்கு தெரியாது.

கேள்வி : 2 ம் மனைவியாக உங்கள் அம்மாவிற்கு முதல் 2 குழந்தைகள் பிறந்து இறந்து விட்டது என்றாலும், 3 வது குழந்தை தான் இந்த வழக்கு வாதியின் கணவர் என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : நீங்கள் எந்த வருடம் பிறந்தீர்கள் என்றால்?

பதில் : 1960.

கேள்வி : 1958 ம் ஆண்டு உங்கள் குடும்பத்திற்காக வாங்கிய சொத்துக்கள் விபரம் பற்றி உங்களுக்கு தெரியாது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்களுக்கு விபரம் தெரிந்த காலத்தில் இருந்தே உங்கள் அப்பா தான் குடும்ப சொத்துக்களை அவர் உயிருடன் இருக்கும் வரை அவர் தான் கவனித்து வந்தார் என்றால் ?

பதில் : சரிதான். அதோடு எனது 2 அம்மாக்களும் கவனித்து வந்தார்கள்.

கேள்வி : நீங்கள் கூட்டு குடும்பமாக இருந்து உங்கள் அப்பா தான் எல்லா வரவு செலவு நிர்வாகத்தை கவனித்து வந்தார் என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : 1985 ல் உங்களது அப்பா இறந்த பிறகு 1985 முதல் நீங்கள் தான் வழக்கு சொத்துக்களை நிர்வகித்து வந்தீர்கள் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : 1985 ல் உங்கள் அப்பா இறக்கும் போது எவ்வளவு கடன் வைத்து சென்றார் என்றால்?

பதில் : ரூ1,25,000/–

கேள்வி : நீங்கள் நிர்வகித்து கடனை அதிகரித்திர்களா அல்லது குறைத்தீர்களா என்றால்?

பதில் : கடன் இருந்தது.

கேள்வி : 1992 ல் எவ்வளவு ரூபாய் கடன் இருந்தது?

பதில் : ரூபாய் 1,35,000/–

கேள்வி : 1992 ல் பொது பணம் எதுவும் இல்லை என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : 3 வது பிரதிவாதி நாகேந்திர மணிக்கு பாகப்பிரிவினையின் போது பொது பணத்தில் இருந்து ரூபாய் 60,000/– த்தை கொடுக்கவில்லை என்றால்?

பதில் : சரிதான். நாங்கள் 3 சகோதரர்கள் சேர்ந்து பணம் கொடுத்தோம்.

கேள்வி : 1992 ம் வருடம் பாகப்பிரிவினையை பஞ்சாயத்தார் முன்னிலையில் பேசி பின்பு பதிவி செய்தீர்கள் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : பாகப்பத்திரம் எழுதுவதற்கு வாசகங்களை சொன்னது யார் என்றால்?

பதில் : எனது சகோதரர் காலஞ்ச் என்ற சந்திரசேகரன்.

கேள்வி : அவர் சொன்ன வாசகப்படி பத்திரம் எழுதி பதிய கொடுத்தது யார் என்றால்?

பதில் : எங்கள் அண்ணன் சந்திரசேகரன் தான்,

கேள்வி : வா.சா.ஆ 2 ல் வழக்கு சொத்தின் 9 மற்றும் 10 வது அயிட்டங்கள் நாகேந்திர மணி 3 ம் பிரதிவாதி பாகத்திற்கு சேர்த்து எழுதப்பட்டு பின் அடிக்கபட்டு இருக்கிறது என்றால் ( தற்போது வாதி தரப்பு வழக்கறிஞரால் அந்த பகுதி சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது)?

பதில் : சரியல்ல.

கேள்வி : வா.சா.ஆ 2 ன் படி உங்களுக்கு ரூ90,000/– மதிப்பு உள்ள சொத்து ஒதுக்கபட்டது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : ஆனால் 3 ம் பிரதிவாதி நாகேந்திர மணிக்கு ரூ60,000/– பணம் கொடுத்ததாக உள்ளது என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : கூடுதல் குறைச்சலாக பாகம் பிரித்தது நீதி நியாயம் அற்றது என்றால் ?

பதில் : சரியல்ல.

கேள்வி : வா.சா.ஆ 2 ல் எல்லா சொத்துக்களும் எழுதப்படவில்லை என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்கள் அப்பாவின் வாரிசுகளான 2 மனைவிகளும், 3 மகள்களும் வா.சா.ஆ 2 ல் கையெழுத்து தரப்பினர்களாக சேர்த்து செய்யவில்லை என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : ஆகையால் வா.சா.ஆ 2 செல்லாது என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் அம்மா எந்த வருடம் இறந்தார்கள் என்றால் ?

பதில் : 2017 கடைசிலோ 2018 தொடகத்திலோ இறந்து விட்டார்.

கேள்வி : அவர் இறப்பதற்கு முன்பு 1 வருடமாக படுத்த படுக்கையாக நோயில் இருந்தார் என்றால்?

பதில் : சரியல்ல. 2 மாதங்கள் மட்டும் இருந்தார்.

கேள்வி : அப்போது தான் நீங்கள் மருத்துவ செலவு செய்தீர்கள் என்றால்?

பதில் : இறப்பதற்கு 4 வருடங்கள் முன்பு இருந்தே நான் மருத்துவ செலவு செய்தேன்.

கேள்வி : அப்போது தான் உங்கள் மனைவியின் நகையை விற்ற செலவு செய்த காலம் தான் ?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்கள் தம்பியும் மருத்துவ செலவு செய்தாரா என்றால்?

பதில் : ஆம். சேர்ந்து தான் செய்தோம்.

கேள்வி : நீங்கள் தற்போது குடியிருக்கும் வீட்டின் விலாசம் என்ன என்றால்?

பதில் : 2/17, வடக்கு மட்டன் ஸ்டால் , 1 வது தெரு , ஆகும்.

கேள்வி : அங்கு எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறீர்கள் என்றால்?

பதில் : 1992 ல் இருந்து.

கேள்வி : மேற்படி விலாசத்தில் உங்கள் மனைவி , மகன் , 2 மகள்கள் உடன் குடியிருந்து வருகின்றீர்கள் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : நீங்கள் மேற்படி 5 நபர்களுடன் சேர்ந்து உங்கள் குடும்பத்தை பொருத்தளவு மட்டும் பொதுவாக வைத்து வரவு செலவு நிர்வகித்து வருகின்றீர்கள் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : வா.சா.ஆ 11 மற்றும் வா.சா.ஆ 12 உங்கள் அம்மா எழுதியதாக ஆள்மாறாட்டம் செய்து உற்பத்தி செய்யப்பட்ட பத்திரம் ஆகும் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : வா.சா.ஆ 11 மற்றும் வா.சா.ஆ 12 ம் பதிவான 10 தினங்களுக்குள்ளேயே நீங்கள் உங்கள் மனைவிக்கு மேற்படி சான்றாவணங்களில் உள்ள சொத்தை கிரையம் செய்து விட்டீர்கள் என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : சட்ட விரோதமாக உற்பத்தி செய்த தானபத்திரங்களை வைத்து வா.சா.ஆ 11 மற்றும் வா.சா.ஆ 12 யை முறைப்படுத்துவதற்காக மீண்டும் சட்ட விரோதமாக இரண்டு கிரைய பத்திரங்களை உங்கள் மனைவியின் பெயருக்கு செய்து உள்ளீர்கள் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : நீங்கள் 1ம் பிரதிவாதி உங்களுக்கும், 2ம் பிரதிவாதியான உங்கள் தம்பிக்கும், 16 வது பிரதிவாதியான உங்கள் மனைவிக்கும், 17 ம் பிரதிவாதியாகிய உங்கள் தம்பி மனைவிக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : நீங்கள் மேற்சொன்ன நான்கு பிரதிவாதிகளுக்கும் சேர்த்து எதிர் வழக்குரை தாக்கல் செய்து தற்போது முரண்பட்டு 1 மற்றும் 16 பிரதிவாதிக்கு மட்டும் தான் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : நீங்கள் தாக்கல் செய்த எதிர் உரையில் 3 ம் பக்கத்தில் , முதல் வரியில் வாதிக்கு உடல்நிலைய சரியில்லாத காரணத்தினால் பத்திர ஆபிஸ் வந்து வா.சா.ஆ 2 ல் கையெழுத்து செய்யவில்லை என்று சொல்லியுள்ளீர்கள் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : நீங்கள் உங்கள் எதிர் உரையில் 5 வது பக்கத்தில் 10 வது பாராவில் வாதியும், வாதியின் ஒரே வாரிசு ஆன 3 ம் பிரதிவாதி கடந்த 27 வருடமாக ஒரே வீட்டில் வழக்கு சொத்து அயிட்டம் நம்பர் 9 மற்றும் 10 ல் வசித்து வருகிறார்கள் என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் ?

பதில் : சரியல்ல. கடந்த 10 வருடமாக இருக்கிறார்கள்.

கேள்வி : பெரியகுளம் மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 12/2013 என்ற வழக்கில் பாகம் கேட்டு இந்த வழக்கில் உள்ள 7,8,9 பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்தததில் அவர்களுடைய பாகத்திற்கு பணமாக 1 மற்றும் 2 ம் பிரதிவாதி கொடுத்து தான் மேற்படி உங்கள் சகோதரிகள் வழக்கை வாபஸ் செய்து கொண்டார்கள் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : 7 , 8 அயிட்ட சொத்து வழக்குகள் உங்கள் அப்பாவின் பணத்தில் அவரின் 2 மனைவிகளின் பெயரிலும் பொது குடும்பத்திற்காக கிரையம் பெற்று பொது குடும்ப கூட்டு சுவாதீனத்தில் இருந்து வந்தது என்று சொன்னால்?

பதில் : தப்பு.

கேள்வி : வாதிக்கு இந்த வழக்கு சொத்தில் வாதிக்கு 1/14 பாக உரிமையும் சுவாதீனமும் வழக்கு சொத்தில் உள்ளதை கிடைக்க வேண்டியதை கிடைக்கவிடாமல் இருப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் ?

பதில் : சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 21.04.2023 அன்று வெள்ளிகிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN Digitally signed by S GOPINATHAN Date: 2023.04.21 19:12:12 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.

21.04.2023.